Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஹூ சித்திரை 29 மீ ஞாயிற்றுக்கிழமை [12—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 159

### நேற்று அமைதியான வாக்களிப்பு; அசம்பாவிதங்கள் இல்லை

# தென்பகுதித் தேர்தலில் ஐ.தே.க. முன்னணியில்!

## இறுதி நிலைவரம் இன்று மாலை தெரியும்

கொழும்பு, மே 12

வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் உள்ளூராட்சித் தேர்தல்கள் நேற்று அமைதியாக நடைபெற்றன. குறிப்பிடத்தக்க பெரும் அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இன்று அதிகாலையில் வெளியான முடிவுகளின்படி ஆளும் ஐக்கிய தேசிக் கட்சி பல உள்ளூராட்சி சபைகளில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றி முன்னணியில் இருந்தது.

நேற்றைய தேர்தல் பெரும் அசம்பாவிதங்கள் ஏதுமின்றி: அமைதியாகவும், சுமுகமாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

எனினும் ஆளும் கட்சியினர் சில தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டனர் என்று எதிர்க் கட்சிகள் குற்றஞ்சுமத்தியிருப்பதாக பி. பி. ஸி. அறிவித்தது.

வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் உள்ள 17 மாவட்டங்களிலும் மொத்தம் 236 உள்ளூராட்சிச்சபைகளுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காகவே இத்தேர்தல் நடைபெற்றது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ★ தேர்தல் முடிவுகள்

கொழும்பு, மே 12

நேற்றைய தேர்தலின் சில முடிவுகள் வருமாறு:

[கட்சிகள் பெற்ற வாக்குகளும் அதன் அடிப்படையில் உள்ளூராட்சி சபைக்கு தெரிவான உறுப்பினர்களின் எண்ணிக்கையும்]

**ஹப்புத்தளை நகரசபை**

★ ஐ. தே. க. — 1,006 வாக்கு — 7 உறுப்பினர்

★ சுயேட் குழு 1 — 291 வாக்கு — 2 உறுப்பினர்

**கம்பஹா நகரசபை**

★ ஐ. தே. க. — 3,108 வாக்கு — 6 உறுப்பினர்

★ ஸ்ரீ. ல. சு. க. — 2,399 வாக்கு — 3 உறுப்பினர்

**அம்பாந்தோட்டை நகரசபை**

★ ஐ. தே. க. — 2,290 வாக்கு — 5 உறுப்பினர்

★ ஸ்ரீ. ல. சு. க. — 1,667 வாக்கு — 3 உறுப்பினர்

★ முஸ்லிம் கா. — 501 வாக்கு — 1 உறுப்பினர்

**தங்காலை நகரசபை**

★ ஐ. தே. க.—2087 வாக்கு 5 உறுப்பினர்

★ சு. யே. குழு1 — 1,873 வாக்கு 3 உறுப்பினர்

★ ஸ்ரீ.ல.சு.க —622 வாக்கு 1 உறுப்பினர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 4 இளைஞர் கைதாகினர்

யாழ்ப்பாணம், மே 12

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டம் காக்காச்சிவெட்டை அகதி முகாமை சுற்றிவளைத்த பாலையடிவெட்டை முகாம் இராணுவத்தினர் அங்கிருந்த நான்கு தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர்.

35 ஆம் கிராமத்தைச் சேர்ந்த தம்பிராசா குமரேசமூர்த்தி (வயது 25) என்ற

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கடற் கரும்புலிகளின் எழுச்சி நாள் கூட்டங்கள்

### நாளை மறுதினம் 3 இடங்களில்

யாழ்ப்பாணம், மே 12

கடந்த 4ஆம் திகதி அதிகாலை வேளையில் பருத்தித்துறைக் கடற்பரப்பில் அதிரடித் தாக்குதல் நடத்தி உயிர்த்தியாகம் செய்த இரு கரும்புலிகளின் நினைவாக நாளை மறுதினம் [செவ்வாய்க்கிழமை] எழுச்சி நாள் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

மாலை 6மணிக்கு பின்வரும் இடங்களில் எழுச்சிக் கூட்டங்கள் நடைபெறும்:

★ வலிகாமம் - வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மைதானம்.

★ வடமராட்சி- வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் கழக மைதானம்.

★ தென்மராட்சி - மட்டுவில் சரஸ்வதி வித்தியாலய மைதானம்.

தம் நெஞ்சையே வெடி குண்டாக்கி - தம் உடலையே திரி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## புளியங்கூடலில் வீடுகள் ஷெல் வீச்சினால் சேதம்

நேற்றுப் பிற்பகல் 4 மணிக்குப் பின்னர் சரவணை, பள்ளம்புலம், புளியங்கூடல் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்று முன்தினம் இரவும் ஷெல் வீச்சுக்கள் இடம்பெற்றன. நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் சி-பிளேன் சுற்றி வட்டமிட்டதைத் தொடர்ந்தே ஷெல் வீச்சு ஆரம்பித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இரண்டு நாட்களும் நடந்த ஷெல் வீச்சுக்களினால் புளியங்கூடலில் வீடுகள் பல சேதமடைந்தன என்றும்— நேற்றைய ஷெல் வீச்சில் புளியங்கூடல் சந்திப் பகுதியில் இரண்டு வீடுகள் சேதமுற்றன என்றும் தெரியவந்தது. [ஒ-125]

## விசேட ஜி. சீ. ஈ. (உயர் தர) பரீட்சை:

# இரண்டாம் தொகுதி வினாத்தாள் 15 ஆம் திகதி கப்பலில் வந்து சேரும்

யாழ்ப்பாணம், மே 12

விசேட ஜி.சி.ஈ [உயர்தர] பரீட்சைக்குரிய இரண்டாம் தொகுதி வினாத்தாள்கள் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்று பரீட்சை ஆணையாளர் திரு. ஆ. தா. வெதமுல்ல, யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்துக்கு நேற்று அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வரும் கப்பலில் வினாத்தாள்கள் அனுப்பி வைக்கப்படும் என்றும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாவட்டங்களுக்கான வினாத்தாள்களும் இதில் அடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பரீட்சை மீண்டும் ஆரம்பிக்கும் திகதி, நேரசூசி போன்ற விவரங்கள் பின்னர் வெகுசன தொடர்புச் சாதனம் மூலம் அறிவிக்கப்படும் என்று தெரி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மன்னாரில் வீடு, வீடாக தேடுதல்

யாழ்ப்பாணம், மே 12

மன்னாரில் சில பகுதிகளில் நேற்று வீடு, வீடாகத் தேடுதல் நடத்தப்பட்டது.

நேற்றுக் காலை முதல் மாலை வரை படையினர் வீடுகள் தோறும் சோதனையிட்டதுடன், பலரை விசாரணைக்காக கூட்டிச் சென்றனர் என்றும் தெரியவந்தது. [ஒ-3]

## வெல்லாவெளி முகாமருகே இரு சிதைந்த சடலங்கள்

யாழ்ப்பாணம், மே 12

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெல்லாவெளி இராணுவ முகாமுக்கு அருகில் பீலிவாறு என்ற இடத்தில் இரு சடலங்கள் நேற்றுக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஓர் ஆணினதும், ஒரு பெண்ணினதும் சடலங்களே உருக்குலைந்து அடையாளம் காணப்பட முடியாத நிலையில் கிடந்ததாகத் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ]

### முச்சந்தி முரளி



அப்ப...உத்தமருக்கு வெற்றிக் களிப்பு என்டு சொல்லுங்கோ......!

## குடும்பஸ்தர் சூடுபட்டு காயம்

நேற்றுக் காலை 6. 30 மணியளவில் மட்டக்களப்பு படுவான்கரைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றைப் படையினர் சுற்றி வளைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் காயமடைந்தார்.

ரட்ணராஜா [37 ஆம் கிராமம்] என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே காயமடைந்தவராவார். [உ]

# உணவுப் பொருள் நிலை குறித்து ஜனாதிபதிக்கு நேரில் விளக்கக் குழு

## இங்கிருந்து கொழும்பு செல்லும்

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாண மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு நிலவும் பற்றாக்குறை குறித்து சரியான நிலையை ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு நேரில் எடுத்துரைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கென விசேட குழு ஒன்றைத் தெரிவு செய்யவும் ஏற்பாடாகி உள்ளது.

யாழ்ப்பாணம் செயலகத்தில் நேற்று நடைபெற்ற அரசாங்கத் திணைக்களத் தலைவர்கள் மாநாட்டில் இம்முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

மாநாட்டிற்கு மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் தலைமை வகித்தார். செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைச் சேர்ந்த இரண்டு பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

கடந்த பத்து மாதங்களாக குடாநாட்டுக்கு வந்து சேர்ந்த பொருள்களின் அளவு, இங்கு வாழும் மக்களுக்கு தேவைப்படும் அளவு ஆகிய புள்ளி விவரங்கள் உட்பட உண்மை நிலைமையை [illegible] கொழும்பில் உள்ளவர்களுக்கு [illegible].

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள
செஞ்சிலுவைச் சங்க
அங்கத்தவர்களுக்கு மட்டும்

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை [14 - 05 - 91] மாலை 3 30 மணிக்கு சங்கப்பணிமனையில் கிளைச் சபைக்குரிய நிர்வாகத் தெரிவு நடைபெறவிருப்பதால் அங்கத்தவர்கள் சமூகம் கொடுக்கும்படி வேண்டப்படுகின்றார்கள்.

— செயலாளர்.

செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணம். [C-5000]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## மேரி பாக்கியம் செல்லத்துரை

புளோலி சாலையடியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி மேரி பாக்கியம் செல்லத்துரை 10-5-91 இல் மானிப்பாயில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற J. K செல்லத்துரை [ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிருபைராணி, கிருபைராஜா, கிருபைநாயகம் [அவுஸ்திரேலியா], கிருபாமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெபமணி, நிதி [அவுஸ்திரேலியா], Dr. ராஜன்ஹமல் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார், அன்னாரின் இறுதி ஆராதனை இன்று 12-05-91 ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு நடைபெற்ற பின்பு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இராமேஸ்வரன் ஒழுங்கை, தகவல்:
உடுவில் வீதி, திருமதி ராணி இராஜசூரியர்
மானிப்பாய், [16794]

## சிதம்பரப்பிள்ளை முத்துவேலு
[முன்னாள் பிரபல வர்த்தகர், பளை]

கண்டி வீதி, பளையைச் சேர்ந்த முன்னாள் பிரபல வர்த்தகர் சிதம்பரப்பிள்ளை முத்துவேலு அவர்கள் 10 - 05 - 91 ல் காலமானார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 13 - 05 - 91 பி. ப. 4. 00 மணிக்கு கண்டி வீதி, பளையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பளை, தம்பகாமம் மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
மு யோகராஜா
[புதல்வன்]

கண்டிவீதி,
பளை.
10 - 05 - 91 [16798]

## திருமதி
## சிவபாக்கியவதி கோபாலசிங்கம்

கல்வளை சண்டிலிப்பாயைச் சேர்ந்த சிவபாக்கியவதி காலமாகிவிட்டார். அன்னார் Dr. T. கோபாலசிங்கம் J. P. அவர்களின் அன்பு மனைவியும் வசந்தகுமாரி, தயாவதனி, சிவலோசனி, Dr. சிறீதரன், பிரபாகரன் ஆகியோரின் தாயாரும் குணரத்தினம், மனோகரன், வத்சலகுமாரி, வசந்தா ஆகியோரின் மாமியும் ஔவை, ராதை, ஈசன், லக்ஷ்மன், தக்ஷாயினி, சஜீவன், ஜாமினி, வினோத் ஆகியோரின் பேத்தியும் டாக்டர் P. செல்லையா, மனோன்மணி அம்மாள் ஆகியோரின் மகளும் காலஞ்சென்ற வ தம்பிராஜா, பொன்னம்மா ஆகியோரின் மருமகளும் மார்க்கண்டேயர், திருமதி புஷ்பவதி அருளானந்தம் இராமகிருஷ்ணா ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று [11-05-1991] சண்டிலிப்பாயில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சல்வளை, Dr.T. கோபாலசிங்கம்
சண்டிலிப்பாய். [கணவன்]
[4068]

## திருமதி க. முத்தம்மா

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், சரம்பன் கிழக்கில் வசித்தவருமாகிய திருமதி கந்தையா முத்தம்மா 27 - 4 - 91 இல் அகால மரணமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், சிறிதேவி [இந்தியா], பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சின்னத்துரை, சங்கரப்பிள்ளை ஆகியோரின் மாமியாரும், கருணாகரன், கௌசலா, சிவசங்கர், ஊர்மிளா, சித்ரபேசன், வாசுகி, ஜானகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
228/1 நாவலர் வீதி, சி. சங்கரப்பிள்ளை
யாழ்ப்பாணம். [16711]

# தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள்
# பிரேமாவுடன் நேற்றுப் பேச்சு!

யாழ்ப்பாணம், மே 12

வடக்கு கிழக்கு பகுதிகளில் சேவை புரிந்துவரும் சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசவைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர்.

அப்பாவி மக்களுக்கான சேவையைத்தொடர தொண்டர் ஸ்தாபனங்களுக்கு முழுப் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்திக்கூறினர் என்று தெரியவருகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தொண்டர் ஸ்தாபனங்களின் அவசர நிவாரணப் பணிகள் தற்சமயம் தடைப்பட்டுள்ளமை குறித்தும் சந்திப்பின் போது சுட்டிக்காட்டப்பட்டதாகத் தெரியவந்தது.

ஊரடங்கு வேளைகளிலும் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் எதுவித தடங்கலுமின்றி படையினரின் கெடுபிடிகளுக்கு இலக்காகாதவாறு சுயாதீனமாகச் செயற்படப் பாதுகாப்பு உத்தரவாதம் தந்தால், தமது சேவையைச் செவ்வனே தொடர முடியும் என்றும் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொண்டர் பிரதிநிதிகளின் கோரிக்கைகளுக்குச் சாதகமான பதிலை ஜனாதிபதி இரண்டொரு தினங்களில் தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [ஓ-3]

## ஐந்து புதிய நிர்வாக அதிகாரிகள்

யாழ்ப்பாணம், மே 12

யாழ்-மாவட்டத்தில் உள்ள ஐந்து உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மட்டும் நடத்தப்பட்ட நிர்வாக அதிகாரிகள் பரீட்சையில் சித்தியடைந்த பலரில் இவர்கள் ஐவரும் அடங்குவர்.

ஊர்காவற்றுறை, வேலணை நெடுந்தீவு. மருதங்கேணி, உடுவில் ஆகிய பிரிவுகளுக்கே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

[ஓ-3]

## 5 தொகுதிகளில் தேர்தல் ஒத்திவைப்பு

சண்டிகார், மே 12

கடந்த சில தினங்களில் அடுத்தடுத்து வேட்பாளர்கள் கொலை செய்யப்பட்டதன் காரணமாக பஞ்சாப் மாநிலத்தில் 5 சட்டசபைத் தொகுதிகளிலும் ஒரு லோக சபைத் தொகுதியிலும் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இம்மாநிலத்தில் உள்ள லூதியானா லோகசபைத் தொகுதியில் இருந்து அகாலிதல் பாதல் கட்சி வேட்பாளராகப் போட்டியிட மனுத்தாக்கல் செய்திருந்த திரு. ஹர்த்தீர்ச் சிங் வெள்ளி சீக்கியத் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதேவேளை - பஞ்சாப் மாநிலத்தில் தேர்தல் திட்டமிட்டபடி நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது [ஓ-எ]

## இஸ்ரவேலுக்கு சோவியத் எச்சரிக்கை

டெல்அவிவ், மே 12

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில் சோவியத் யூதர்களைக் குடியமர்த்தும் விஷயத்தில் இஸ்ரவேல் தீவிரம் காட்டுமானால், சோவியத் அரசு தனது நாட்டில் இருந்து யூதர்கள் வெளியேறுவதற்குத் தடை விதிக்கும் நிலை ஏற்படலாம் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

சோவியத் வெளியுறவு அமைச்சர் அலெக்ஸாண்டர் பெஸ்மியர் நாக் இந்த எச்சரிக்கையை தமது மத்திய கிழக்குப் பயணத்தின்போது வெளியிட்டார்.

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் சோவியத் யூதர்களை இஸ்ரவேல் அரசு குடியமர்த்தி வருவது, பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருவது [illegible]

[இ-எ]

# பாரதிதாசன் கல்வி நிறுவனம்
(BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## O/L DAY CLASSES

Year 9, 10, 11 மாலை வகுப்பு

விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்

கணிதம்
பா. பி. பாஸ்கரன்
[யாழ். பல்கலைக் கழகம்]

வர்த்தகம் — செல்வி. எஸ். பாமா
சமூகக்கல்வி — ஜோசப் B. A
தமிழ் — அருண் B. A (Hons)
ஆங்கிலம் — லோகேந்திரா [யாழ். பல்கலைக் கழகம்]

### ஆரம்பம்

DAY CLASSES:- 13-05-1991 திங்கள் 9. 00 மணி

மாலை வகுப்பு:- (Year 9, 10, 11) 14-05-1991 செவ்வாய் 3.00 மணி

[சி/5051]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தாயின் மடியில்:
26 - 09 - 1930

இறைவன் திருவடியில்:
13 - 04 - 1991

## அமரர் செல்லையா தங்கம்மா

திருமதி செல்லையா தங்கம்மா அவர்களின் மரண வைபவ இறுதிக் கிரியைகளில் நேரில் பங்கு கொண்டும், மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு இன்று 12-05-1991 இல் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்வதோடு 13-05-1991 திங்கட்கிழமை நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்தியங்களிலும் கலந்து மதிய போசனத்திலும் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து ஏகுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சகோதரர்கள்,
சகோதரரின் பாரியார்,
மருமக்கள், உறவினர்கள்.

வல்லிபுரக்குறிச்சி,
புலோலி. [16801]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளை ஒரே இடத்தில் தங்க வைக்க முயற்சி

அராலி, மே 12

சங்கானைப் பகுதியில் அங்கும் இங்குமாகத் தங்கியிருக்கும் அகதிகளை ஒரே அகதி முகாமில் வைத்துப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதற்காக தியேட்டர் மண்டபம் ஒன்று தெரிவு செய்யப் பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இம்முகாம் உதவி அரச அதிபரால் நேரடியாகப் பராமரிக்கப்படவுள்ளது. [இ-12]

# செஞ்சிலுவை அடையாளமிடப்பட்ட ஆஸ்பத்திரியும் குண்டினால் சேதம்!

## வவுனியாவுக்கு கடமைக்குச் சென்றவருக்கு புளியங்குளத்தில் ஏற்பட்ட அனுபவம்

யாழ்ப்பாணம், மே 12

தற்போது வன்னிப் பகுதியில் இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கையின் போது செஞ்சிலுவை அடையாளமிடப்பட்டுள்ள ஆஸ்பத்திரிகள்கூடத் தப்பவில்லை.

கடந்த 6ஆம் திகதி திங்கட்கிழமை புளியங்குளம் அரசினர் ஆஸ்பத்திரி மீது நடத்தப்பட்ட பொம்மர் தாக்குதலில் ஆஸ்பத்திரி விடுதியும் மருந்தகமும் முற்றாகச்சேதம் அடைந்தன.

பொம்மர் வந்து குத்திப் பதிந்த போது அங்கு கடமையில் இருந்த ஒரே ஒரு டாக்டர் பதுங்கு குழிக்குள் சென்றதால் உயிர் தப்பினார்.

டாக்டருடன் பதுங்கு குழிக்குள் இருந்து தப்பிய வவுனியா சுகாதாரப் பகுதி ஊழியர் ஒருவர் உதயன் செய்தியாளரிடம் தனது அனுபவத்தை பின்வருமாறு தெரிவித்தார்.

கடந்த 6 ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா சுகாதாரப் பணிப்பாளர் காரியாலய உத்தியோகத்தருடன் சாளி மோட்டார் சைக்கிளில் புறப்பட்டு ஓமந்தை பகுதியை அடைந்தேன்.

அங்கு இராணுவம் வந்துள்ளதாக அறிந்து புளியங்குளம் வைத்தியசாலையை நோக்கித் திரும்பினோம்.

திரும்பி வரும் வழியில் அநேக வாகனங்கள் குண்டு வீச்சால் சேதமடைந்து வழி எங்கும் கிடந்தன. அதே சமயம் குண்டு வீச்சு விமானங்களுக்குப் பயந்து பல லொறிகள் விரைந்து திரும்பிக் கொண்டிருந்தன.

வேகமாக வந்த லொறி ஒன்று சைக்கிளில் வந்து கொண்டிருந்த வல்வெட்டித்துறைவாசி ஒருவரை மோதிவிட்டு விரைந்து சென்றது. அவர் துடிதுடித்து இறந்த காட்சி பயங்கரமாக இருந்தது.

### 2 பொம்மர்கள்

நாங்கள் புளியங்குளம் வைத்தியசாலைக்குவந்து விடுதிக்கு அருகில சாளி மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வைத்தியசாலைக்கு சென்றோம்.

அப்போது காலில் குண்டு பட்டு இரத்தம் சிந்திய நிலையில் ஓர் இளைஞன் அங்கு கொண்டுவரப்பட்டான். தனியே நின்று டாக்டர் ஒருவர் சிகிச்சை அளித்துக்கொண்டிருந்தார் நானும் அவருக்கு உதவியாக நின்று கொண்டிருந்தேன்.

திடீரென இரு பொம்மர்கள் தாழப் பறந்து வந்தன. செஞ்சிலுவை அடையாளம் வைத்தியசாலைக் கூரையில் போடப்பட்டிருந்தபடியால் தாக்கப்படமாட்டோம் என தொடர்ந்து சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தோம்.

தாழப்பறந்த விமானங்கள் வைத்தியசாலையை நோக்கி வேகமாக ஊடுருவிக்கொண்டு வருவதை அவதானித்தோம்.

உடனடியாக பாய்ந்து ஓடி பக்கத்திலிருந்த பதுங்கு குழிக்குள் புகுந்து கொண்டோம்.

டாக்டரின் விடுதியில் ஒரு குண்டும், ஆஸ்பத்திரி மருந்தகத்தில் இன்னொரு குண்டும் விழுந்து வெடித்தன. இதனால் விடுதியும், மருந்தகமும் முற்றாகச் சேதமடைந்தன. டாக்டரும் நானும் தெய்வாதீனமாக உயிர் தப்பினோம். மீண்டும் வெளியில் வந்து நோயாளியை வேறு வாகனம் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பினோம்.

அங்கிருந்து நாங்கள் புறப்பட்டு காட்டுப் பகுதியில் ஓர் வீட்டில் இரவு தங்கினோம். மீண்டும் பொம்மர்கள் அப்பகுதியில் வட்டமிட்டன. நாங்கள் பக்கத்திலிருந்து வேறு வீடு ஒன்றுக்குச் சென்று அங்கிருந்த பதுங்கு குழிக்குள் பதுங்கினோம். எதிர்பார்த்தது போல் ஆறு குண்டுகள் அந்த வீட்டுப் பகுதியில் விழுந்து வெடித்தன. நாம் வெளியே வந்த போது அங்கு கட்டப்பட்டிருந்த கால் நடைகள் இறந்து கிடந்தன. எனது சாளி சைக்கிளின் ஒரு கைபிடியும் துண்டாடப்பட்டிருந்தது. மட்காட்டும் சிதறிக் கிடந்தது.

மேலும் அங்கிருந்தால் ஆபத்து என அஞ்சி யாழ் வந்து சேர்ந்தோம்.

இப்படி அவர் கூறினார். [இ - 18]

# 83 குடும்பங்களுக்கு நவாலியில் வீட்டு வசதி

புனர்வாழ்வு நிறுவனம் நவாலியிலுள்ள 83 அகதிக் குடும்பங்களுக்கு நவாலி சோமசுந்தரப் புலவர் வளவில் தனித்தனி வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

இக்குடும்பங்கள் வலி- வடக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் வீடு வாசலை இழந்து இடம் பெயர்ந்து நவாலியில் உள்ள பாடசாலைகளில் தங்கியிருந்தன.

இவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியில் புனர்வாழ்வு நிறுவனம் இந்த வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது. அத்துடன் இக்குடும்பங்களின் சிறார்களின் கல்வி வசதிக்காக பாலர் பாடசாலை, நூல் நிலையம் ஆகியவற்றையும் அமைத்துக் கொடுத்துள்ளது.

இக்குடும்பங்களிலிருந்தே படித்த நான்கு பெண்கள் தெரிவு செய்யப்பட்டு பாலர் பாடசாலை ஆசிரியைகளாக நியமிக்கப்பட்டு மாதாந்த சம்பளமும் இவர்களால் வழங்கப்படுகிறது.

மேலும் இங்குள்ள 35 குடும்பங்களுக்கு அவர்கள் வியாபாரம் செய்து சீவிப்பதற்கென இரண்டாயிரம் ரூபா வீதம் கடன் அடிப்படையில் பணமும் வழங்கப்பட்டுள்ளது. [இ-100]

## ஆண்டு 11க்கான சுருக்கெழுத்து - தட்டெழுத்து பாட நூல் வெளிவரும்

மானிப்பாய், மே 12

ஆண்டு 11 இல் சுருக்கெழுத்து - தட்டெழுத்து பாடத்தை போதிப்பதற்கு வேண்டிய நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு வேண்டிய நிதி வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் இருந்து யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துக்கு கிடைத்திருப்பதாக அறியப்படுகின்றது.

ஆண்டு 9 - 10 க்கான புத்தகங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. நிதி கிடைத்திருப்பதால் பதினொராம் ஆண்டுக்கான புத்தகமும் விரைவில் வெளியிடப்பட உள்ளது. [இ-90]

## உணவு இன்றி நாய்கள் அலைகின்றன

தீவுப்பகுதியை விட்டு மக்கள் யாழ்ப்பாணம் பகுதியை நோக்கி இடம் பெயர்ந்துள்ளதால் தீவுப்பகுதியைச் சேர்ந்த வளர்ப்பு நாய்கள் உணவு, நீர் இன்றி அலைகின்றன என்று தெரிவிக்கப் படுகின்றது. [இ - 167]

# பாரம்பரிய வைத்தியத்துக்கு சகலரதும் ஆதரவு தேவை

## வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், மே 12

''அந்நியர் எம் மண்ணை ஆண்ட காலங்களில் சுதேச வைத்தியத்துறை புறக்கணிக்கப்பட்டது. அதற்குரிய இடம் வழங்கப்படவில்லை. அரச ஆதரவும் இருக்கவில்லை. எனவே எம் மண்ணில் இப் பாரம்பரிய வைத்தியத்தை வளர்ப்பது வைத்தியர்களினதும் பல்கலைக்கழகத்தினதும் பணி ஆகும்.''

கைதடி சித்த மருத்துவ பீடத்தில் நடைபெற்ற 'சுதேசியன்' பத்திரிகை வெளியீட்டு விழாவில் உரையாற்றும் போது யாழ். பல்கலைக்கழக உப வேந்தர் திரு. அ. துரைராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் 'சித்த வைத்தியம் மக்களின்பாரம்பரியவைத்தியம். சித்த வைத்தியத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் நாம் எல்லா வகைகளிலும் ஊக்கமும் உதவியும் அளிக்கவேண்டும். எமது காலத்தில் அதனை முன்னேற்ற முடியாவிடில் அது எமக்குத்தான் இழிவை ஏற்படுத்தும். சித்த வைத்தியத்துறையின் வளர்ச்சிக்குப் பல்கலைக்கழகம் எல்லா வகை உதவிகளும் செய்யக் காத்திருக்கிறது''-

இப்படி அவர் கூறினார்.

டாக்டர் சோ. சபாநாதன் தலைமை வகித்த இவ் விழாவில், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு. வே. பாலகுமார், மாநகரசபை ஆணையாளர் திரு. பாலசிங்கம் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மட்டுவிலைச் சேர்ந்த டாக்டர் பே. பிலிப்ஸ் 'சுதேசியன்' முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார். [இ-த]

## பருப்புக்குப் பதில் பயறு

உரும்பராய், மே 12

உலர் உணவு அட்டைக்கு வழங்கப்பட்டு வந்த மைசூர் பருப்புக்குப் பதிலாக இப்போது பயறு வழங்கப்படுகிறது. [இ-15]

## மானிப்பாய் இந்து பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 12

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், பழைய மாணவர் ஒன்றிய தினமும் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளன.

நிகழ்ச்சிகள் காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும் [illegible] 3-30 மணிக்கு நடைபெறும். [இ]


## காவல் துறை

### பெண் காவலர் பதவிகள்.

பெண் காவலர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. வயது எல்லை: 18 முதல் 25 வரை
2. உயரம்: 5 அடி 2 அங்குலம்
3. கல்வித் தகைமைகள்: எட்டாம் வகுப்பு முதல் க. பொ. த [சாதாரணம்], க. பொ. த. [உயர் தரம்] வரை.

விண்ணப்பதாரர்கள் 15-05-1991 இற்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி யாழ் பிரதேசக் காரியாலயத்தில் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல் துறை

[ஈ-101]



## சிறுவர் பாதுகாப்பு நிதியம் [ஐ. இ.] S. C. F. (U. K.)

பெற்றோர் இருவரையும் இழந்த பிள்ளைகளின் உதவித் திட்டத்தின் கீழ் சிறுவர் பாதுகாப்பு நிதியத்திடம் அடுத்த ஓராண்டுக்கான உதவிப் பணம் வைப்பிலிடத் தந்த புத்தகங்கள் [1990 ஆடி மாதம், 1991 சித்திரை வரையும்] வந்துவிட்டன. உரிய பிள்ளைகளின் பாதுகாவலர்கள் எமது அலுவலகத்திற்கு விடுமுறைகள் அற்ற செவ்வாய்க்கிழமைகளில் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுச் செல்லலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

அலுவலக முகவரி:
சிறுவர் பாதுகாப்பு நிதியம் [ஐ.இ.]
''கருவேம்பன் வளவு''
இராச வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

[16798]



## VACANCY

Applications are invited from suitable candidates for the post of Community Development Trainer. This training programme for about six selected trainees includes the following areas: The medium of instruction will be in Tamil.

(a) Dairy Developement
(b) Milk food preparation
(c) Soil testing
(d) Co-operative management
(e) Manure and Fertilizer Storage
(f) Seedling preparations
(g) Community animation, basic skills - in community health and Community - Development

The above programme is for six (6) months. The candidates must have experience and relevant qualifications in the above fields. He should be able to reside at the training site for the six months (Quarters will be provided).

Very attractive salary will be paid according to qualifications and experience Not less than Rs 20,000/- per month. Apply before 31st of May 1991, to

The Director of Projects.
Jaffna Diocese of the-
Church of South India,
DIOCESAN OFFICE,
VADDUKODDAI.

[C-4931]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஸ்ரீல். கபேட், மரக்கபேட் சோக்கேஸ், கவுண்டர் மேசைகள், சாப்பாட்டு மேசைகள், தையல் மெஷின், றேடியோ, கடைக்குரிய தளபாடங்கள், பனை மரங்கள், வீட்டுக் கதவுகள், யன்னல்கள், காஸ்குக்கர் என்பன விற்பனைக்குண்டு தொடர்பு 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். [16781]

ஆரம்ப சுகாதார வழிகாட்டி பேராசிரியர் த. இராமதாஸ் F.R C P. D.C.H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவ பீடம்] எழுதியது. கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவி போன்ற அனைத்து சுகாதாரப் பகுதியாளர்களுக்கும் ஓர் அரிய புத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம். விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

### அதிபர்கள் சேவை

போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி ரெங்கித்தல் பொது அறிவு, கல்விக் கொள்கையை உள்ளடக்கியது. அகிரன் வெளியீடு எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். [இ/4932]

### மணமகள் தேவை

யாழ். கத்தோலிக்க மாதாந்தம் 5000/- வருமானமுள்ள, 28 வயதுடைய விழிய மகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர் பார்க்கின்றனர். விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். 40, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை யாழ்ப்பாணம். [16754]

### கல்வி

G. C E. [O/L] இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கு விசேஷ சித்திக்குக் குறைந்த காலத்தில் கற்பிப்பதில் 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேஷ சித்திக்கு 20 மணித்தியாலத்திலிருந்து, 40 மணித்தியாலத்திற்குள் கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [16784]

### கோழித்தீன்

எமது தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும், முட்டையிடும் கோழிகளுக்கான உணவு விற்பனைக்குண்டு. 25 கிலோ பைக்கெட் ஒன்றின் விலை ரூபா 400/- யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [இ-4995]

### தவறிவிட்டது

7 - 5 - 1991 இல் மானிப்பாயிற்கும், சங்கானைக்கும் இடையில் ஒரு பாக் [Bag] தவறிவிட்டது. அதற்குள் இரசாயனவியல் புத்தகம், கைக்கடிகாரம், உடுப்புகள் Ear Horn என்பன அடங்கியிருந்தன கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆறுமுகம் புடைவை மாளிகை, 20, பெரியகடை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். [16791]

ஆனைக்கோட்டை பொன்னையா வீதியில் இருந்து ஊளம்பிட்டி ஆனைக்கோட்டை பள்ளத்து வீதியில் அழகிய 17 கேக் படங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். டாக்டர் அ. தங்கராஜா பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை. [4066]

### தேவை

தராதரமுள்ள பாலர் பாடசாலை ஆசிரியை தேவை. 18 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன் விண்ணப்பிக்கவும். அரியாலை சனசமூக நிலையம் [illegible]குளம். [16796]


# ACCOUNTANCY CLASSES
## NOV. - DEC. 1991

**C. I. M. A.**

Stage I — 18th May 1991
Stage II — 1st June '91

**A. A. T.** (London)

Stage I — 18t May '91
Stage II — 1st June '91
Stage III — 1st June '91

**A. A. T.** (Sri Lanka)

Stage I — 18th May '91
Stage II — 1st June '91

**I. A. B.** (Foundation) — 18th May '91
Inter — 18th May '91
Finals — 1st June '91

மேலதிக விபரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14. st. Peters Lane,
Hospital Road, Jaffna.

[C 4927]


## அறிவித்தல்

யாழ்.
பல்கலைக்கழகம்
இலங்கை

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளுக்கு மாணவர்களிடம் இருந்து கீழ்க்காணப்படும் திகதி வரை தேர்வு விண்ணப்பங்கள் பிரதிப் பதிவாளர் / தேர்வுகள் அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. கல்வி பட்டப்பின் டிப்ளோமா முழு நேரம், பகுதி நேரம் - பகுதி 1, பகுதி நேரம் - பகுதி 11
31 - 05 - 1991

2. இராமநாதன் நுண்கலை [இறுதி] 4 ஆம் ஆண்டுப் பரீட்சை
24 - 05 - 1991

பீஸ் பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா 15/- வீதம் பணத்தை பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பதிவாளர்

1991-05-10 [இ-4999]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
22 01-1960

உதிர்வு:
14 04-1988

திதி: 12-05 1991

### மாணிக்கம் தருமலிங்கம் [மோகன்]

[யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு ஊழியர்]

எமதருமைச் செல்வமே!
எம்மைவிட்டு மூன்று ஆண்டு போனதடா
எம்முயிர் எம்மைவிட்டு போகும்வரை
எம் நெஞ்சிலிருந்து உன் நினைவு போகாது!

அப்பா, அம்மா, அண்ணன்,
அக்கா, உற்றார், உறவினர்கள்.

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு. [16797]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னைமடியில்:
02 - 10 - 1969

விண்ணகத்தில்:
03 - 05 - 1989

திதி:
12 - 05 - 1991

அமரர்

### நாகராசா தெய்வேந்திரன் B.Sc.,

ஈராண்டு வந்தபோது - உன் நினைவு
ஓடி வந்து எம் நெஞ்சை உருக்குகின்றதே
பால் முகம் மாறாத மகனே - உன்
நேசத்தின் அம்மம்மாவும் உன்னிடம் சேர்ந்து
விட்டார். உங்கள் இருவரையும்
தேடியழைக்கின்றோம் நேசத்தில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

பெற்றோர்
சகோதர, சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

ஊர்காவற்றுறை, கிழக்கு.

[16795]

## அமரர் கனகாம்பிகை தங்கராசா

அவர்களின்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செந்தமிழ் நிலத்தில்:
12 - 08 - 1930

அந்தகன் நிலத்தில்:
14 - 04 - 1991

திதி: பங்குனி அபரபக்கச் சதுர்த்தசி

குலத்தின் நிலைக்களமாய்க் குடும்பத்தின் ஒளிச்சுடராய்
பலத்தின் விளைநிலமாய்ப் பாசத்தின் உறைவிடமாய்
என்றென்று முடனிருந்தே யெமதுயிருக் குயிராகி
நன்றதினத் தினமாற்றி நமதுயிருக்குயிராகி
சென்றுமறைந் திருந்தாலுந் சிந்தையுறு தெய்வம் - நீ
கன்றுமன மனமிலாரும் கனகாம்பிகையம்மா!

இவரின் அந்தியேட்டிக் கிரியைகள் [13-05-1991] திங்கள் காலை சந்தை வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று அஸ்தி ஊறணித்தீர்த்தத்தில் கரைக்கப்படும். இக் கிரியைகளின் போது சமூகம் தந்து, மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றாரையும், உறவினரையும், சுற்றத்தையும், சூழலையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்பமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

ச, தங்கராசா (பத்தர்)
குடும்பத்தினர்

சந்தை வீதி, உடுப்பிட்டி. [16685]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உளவளச் சிகிச்சை அத்தியாவசியம்

இராணுவ நடவடிக்கைகளால் உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக ஆய்வு நடத்தப்பட உள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது. அந்த ஆய்வின் போது உளவளம் பாதிக்கப்பட்டவர்களாக இனங்காணப்படுவோருக்கு ஆலோசனையும், சிகிச்சையும் அளிக்கப்படுவதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் கடந்த பதினொரு மாதங்களாக நடந்து வரும் இராணுவ நடவடிக்கைகள் மிகக் குறிப்பாக வான்த் தாக்குதல்கள் தமிழர்களின் பெரும்பாலானோரின் உளவளங்களைப் பாதித்துள்ளன. பலவீனமுறச் செய்திருக்கின்றன.

விமானத் தாக்குதல்களால் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் இறக்கிறார்கள்; மேலும் ஆயிரக்கணக்கானோர் காயமுற்று அங்கவீனர்களாக மாறுகிறார்கள். அவர்களையும் விட ட லமடங்கினர் பதற்றம் பீதி, ஏக்கம் என்பன காரணமாக நேரடியாகவே உளரீதியாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

அவர்களை விட, மேலும் லட்சக் கணக்கான மக்களின் உளவளம் மறைமுகமாகப் பாதிக்கப்படுகிறது. கணவனை இழந்த மனைவி, பிள்ளையை இழந்த தாய், பெற்றோர்களை இழந்த பிள்ளைகள் என்று பலரும் உளரீதியான பாதிப்புக்கு ஆளாகிறார்கள்.

மனித வாழ்க்கைக்கு உடல் ஆரோக்கியம் மிகவும் அத்தியாவசியமானது. அதனை விடவும் மனோநிலை முக்கியமானது; இரண்டும் ஒன்றுக்கு மற்றது தொடர்புடையன. மனக் கவலை, பலவீனமான மனோநிலை, உடல் ஆரோக்கியத்தைக் குறைத்து விடும். மூளை பலவீனமுற்று விட்டால், உளவளம் தேய்ந்து விட்டால் மனம் குழம்பிவிடும், கலங்கிவிடும். அதன் விளைவாக உடல் நிலையும் கெட்டுப் போய் விடும்.

எனவே, யுத்த நிலையால் வயது வித்தியாசம் இன்றி உளவளம் பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகள், மாணவர்கள், இளைஞர்கள், மத்திய வயதினர், முதியவர் என்ற எல்லாத் தரத்தினருக்கும் உளவள ஆலோசனையும், சிகிச்சையும் மிகமிக அவசியமானவை.

இது விடயத்தில் நோய்ச் சிகிச்சை தேவைப்படுபவர்களைவிட, உளவளத்துணை தேவைப்படுவோரே அதிகமாக இருப்பர் என்று உத்தேசிக்கப்படுகிறது.

மனோநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவளத் துணை ஆலோசனை வழங்குவது, தமிழ்ச் சமுதாயத்தைப் பொறுத்த வரையில் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகக் கருதப்பட வேண்டிய கட்டம் இது. எமது சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்கு உடனடியாகவும், விரைவாகவும் இத்திசையில் செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனை சமூக நலன் விரும்பிகளும், வைத்தியத் துறையினரும் இன்னும் சரியாக உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

''சாந்திகம்'' போன்ற ஓரிரு நிறுவனங்களே உளவளத் துணைச் சேவையில் ஈடுபட்டுள்ளன. இன்னும் பல சாந்திகங்கள் உருவாக வேண்டும். வைத்தியர்கள், சமூக, சமயத் துறையினர் இது விடயத்தில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். சுவர் இருந்தால் தான் சித்திரம் தீட்டலாம். மக்கள் வாழ்ந்தால் தான் நாடு இயங்கமுடியும்.

# இராணுவ நடவடிக்கையால் தீவுப்பகுதியில்பயிர்கள் அழிவு

கொழும்புத்துறை, மே 12 தீவுப்பகுதியில் மக்கள்இடம் பெயர்ந்த இடங்களில் புகையிலை மற்றும் சிறுதானியப் பயிர்கள் கவனிப்பாரற்ற நிலையில் அழிந்து வருகின்றன.

காரைநகர், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நாரந்தனை, சரவணை, புளியங்கூடல், சூரியவத்தை, நெருஞ்சிமுனை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு, மண்கும்பான், சாட்டி, வேலணை ஆகியவையே பாதிக்கப்பட்ட பகுதிகள் ஆகும்.

இப்பகுதிகளில் சுமார் 1000 ஏக்கர் காணியில் கௌபி, என்ளு, சணல், பயறு, வெங்காயம், மிளகாய் ஆகியவை பயிர் செய்யப்பட்டிருந்தன.

நல்ல விளைச்சல் கண்டு அறுவடைக்குத் தயாரான நிலையிலேயே நாம் அவற்றைக் கைவிட்டு வந்திருப்பதாக இடம்பெயர்ந்து வந்துள்ள அகதிகள் தெரிவிக்கின்றனர். [இ30]

## மகளிர் அபிவிருத்தி நிலையம் உதவி

யாழ்ப்பாணம், மே 12 இடம் பெயர்ந்து வந்துள்ள தீவுப்பகுதி அகதிகளுக்கு உதவும் பொருட்டு மகளிர் அபிவிருத்தி நிலையத்தினர் உடுபுடவை, உலர் உணவு மற்றும் சமையல் பாத்திரங்களைச் சேகரித்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் வழங்கி உள்ளனர். [இ]

## பட்டப்பகலில் முகமூடித் திருடர்

தென்மராட்சி மே 12 வீட்டில் தனித்திருந்த பெண்ணைப் பயமுறுத்தி அவரிடமிருந்தும், அவரின் பிள்ளையிடமிருந்தும் நகைகளை அபகரித்துச் சென்றனராம் மூன்று முகமூடித் திருடர்கள்.

இச்சம்பவம் மந்துவில் காரைக்காட்டுப் பகுதியில் காலை 10-30 மணிக்கு இடம் பெற்றதாக புலிகளின் செயலகத்தில் முறையிடப்பட்டுள்ளது. [இ-117]

## இந்தியாவிலிருந்து வைத்திய நிபுணர்கள்

கொழும்பு, மே 12 இந்தியாவில் இருந்து ஐம்பது வைத்திய நிபுணர்களைத் தருவிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

காது, தொண்டை மற்றும் சத்திரசிகிச்சை ஆகிய துறைகளைச் சேர்ந்த வைத்திய நிபுணர்களே இந்தியாவில் இருந்து தருவிக்கப்படவுள்ளனர் என்று சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## பட்டங்களில் புலிக்கொடி

குருநகர், மே 12 பட்டங்களில் புலிக்கொடியும் பறக்கும் காட்சிகளை இப்பொழுது குடா நாட்டில் காணமுடிகிறது. [இ-51]

## ஜொலி ஸ்ரார்ஸ்

யாழ்ப்பாணம், மே 12 யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அணி ஒழுங்கு தெரிவு தொடர்பாக இன்று காலை நடைபெற இருந்த குலுக்கல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அணி ஒழுங்குத் தெரிவு எதிர்வரும் புதன்கிழமை [15 ஆம் திகதி] காலை 10 மணிக்கு நடைபெறும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## தீவுப்பகுதி அகதிகள் சிலர் திரும்பிச் செல்கின்றனர்

நெடுந்தீவு, மே 12 இராணுவ நடவடிக்கைகளை அடுத்து தீவுப்பகுதியில் இருந்து அகதிகளாக யாழ். நகர் வந்த மக்களில் சிலர் மீண்டும் தத்தமது இடங்களுக்கு இப்போது திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், சாட்டிப் பகுதிகளில் உள்ளவர்களே திரும்பிச் செல்கின்றனர். [இ-111]

## வேம்படி மகளிர் கல்லூரியின் கட்டடங்களை புனரமைக்க பழைய மாணவிகள் முயற்சி

யாழ்ப்பாணம், மே 12 இராணுவ நடவடிக்கைகள் காரணமாக, வேம்படி மகளிர் கல்லூரிக் கட்டடங்களில் 75 சதவீதமானவை சேதமுற்றுவிட்டன. அதனால் நூற்றுக்கணக்கான மாணவிகள் இடிபாடுகளின் மத்தியிலும், வானம் பார்த்த கட்டடங்களிலும் கல்வி பயில வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கஷ்டத்தைப் போக்குமுகமாகச் சேதமுற்ற கட்டடங்களில் பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ளவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கு கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம் முடிவு செய்துள்ளது. அதன் பொருட்டு பிரஸ்தாப சங்கம் பாடசாலைப் புனரமைப்பு நிதி ஒன்றை ஆரம்பித்திருப்பதாக சங்கத் தலைவி திருமதி கே. துரைராஜா தெரிவித்திருக்கிறார். [அ]

## விஞ்ஞான ஆசிரியருக்கு நெடுந்தீவில் பற்றாக்குறை

நெடுந்தீவு, மே 12 நெடுந்தீவில் மூன்று பாடசாலைகளில் ஜி.சீ.ஈ [சாதாரணதரம்] வரையிலான வகுப்புகள் உள்ள போதும் இரண்டு பாடசாலைகளில் விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது.

இதேவேளை நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் இரண்டு விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களும் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியரும் உள்ளனர். [இ-111]

## துயரங்களை நீக்க கோரி மகஜர்

காங்கேசன்துறை, மே 12 விடுதலைப் புலிகளுடன் நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தையை ஆரம்பித்து வடக்கு கிழக்கு மக்களின் துயரங்களை குறிப்பாகத் தொழிலாளர்களின் துயரங்களைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கண்டவாறு ஜனாதிபதியைக் கோரும் மகஜர் ஒன்றை காங்கேசன்துறை சீமெந்து பொதுத் தொழிலாளர் சங்கம் அனுப்பிவைத்துள்ளது.

போக்குவரத்து வசதி இல்லாத இந்தவேளையில், இடம் பெயர்ந்து பல கஷ்டங்கள் மத்தியிலும், தொழிலாளர்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர் என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-68]

## 87 க்குப் பின் நியமனம் இல்லை

கொழும்புத்துறை, மே 12 யாழ். செயலகத்தில் கடந்த 1987 ஆம் ஆண்டிற்குப் பிறகு கலாசார உத்தியோகத்தர் நியமனம் இடம்பெறவில்லை. [இ-30]

## தேர்த்திருவிழா

கொழும்புத்துறை, மே 12 சுன்னாகம் கதிரமலை அருள்மிகு ஸ்ரீ சிவன் ஆலயத் தேர்த்திருவிழா இன்று 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும். [இ-30]

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே 12 யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவின் வாராந்த வெளியீடான கல்விக்கதிர் வெளியீட்டு விழா எதிர்வரும் 14ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு நல்லூர் சாதனா சி.சீ.த.க. பாடசாலையில் நடைபெறும். [இ]

## மென்பந்து இறுதிப்போட்டி

யாழ்ப்பாணம், மே 12 யாழ். மாவட்ட சாரணர் சங்கம், நல்லூர் திரிசாரணர் குழுவின் அனுசரணையுடன் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் இறுதிப்போட்டி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்று ஞாயிறு பிற்பகல் 1-30 மணிக்கு நடைபெறுகிறது. [இ]

## ஆஸ்பத்திரி இருட்டில்

பளை அரசவைத்தியசாலை இரவு நேரங்களில் இருட்டாக இருப்பதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர். [இ-117]

## ஆங்கிலத்தில் வந்த கடிதம் திருப்பி அனுப்பப்பட்டது

வட்டுக்கோட்டை, மே 12 சங்கானை ப.நோ.கூ. சங்கப் பணிப்பாளர் சபைக்கு ஆங்கிலத்தில் வந்த கடிதம் ஒன்று, அக் கடிதம் வந்த இடத்துக்கே திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது.

மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளையில் இருந்து இந்தக் கடிதம் ப.நோ.கூ. சங்கப் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டிருந்தது.

ஆட்சி மொழியான தமிழிலேயே கடிதம் அனுப்பப்பட வேண்டும் என்று பிரஸ்தாப பணிப்பாளர் சபை சுட்டிக்காட்டி உள்ளது. [இ-161]

# உலகச் செய்திகள்

## தேர்தல் விதி மீறலா?

சென்னை, மே 12 அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா சென்னை வானொலியில் நிகழ்த்திய தேர்தல் உரை, தேர்தல் விதிகளை மீறியதாக அமைந்தது என்று முன்னாள் முதலமைச்சரும் தி. மு. க. தலைவருமான மு. கருணாநிதி குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்றும் தேர்தல் விதிமுறைகளுக்கு அமையவே செல்வி ஜெயலலிதாவின் உரை இருந்தது என்றும் சென்னை வானொலி இயக்குநர் கூறினார். [இ - எ]

## பத்திரிகை செய்தி குறித்து கருணாநிதி

திருச்சி, மே 12 தி. மு. க. பற்றித் தவறான தகவல்களைச் செய்திப் பத்திரிகைகள் வெளியிட்டு வருகின்றன என்று முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி திருச்சியில் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கவலை தெரிவித்தார்.

நாளேடுகள் நடுநிலைமையுடன் செயல்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். [இ எ]

## காஷ்மீருக்குள் ஊடுருவல் அதிகரிப்பு

புதுடில்லி, மே 12 பாகிஸ்தானில் இருந்து தீவிரவாதிகள் காஷ்மீர் மாநிலத்திினுள் ஊடுருவல் செய்வது அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இது குறித்து பாகிஸ்தான் அரசுக்கு இந்தியப் பிரதமர் சந்திரசேகர் கடந்த வெள்ளிக்கிழமை கடும் எச்சரிக்கை ஒன்றை விடுத்தார்.

உலகில் எந்தச் சக்தியாலும் காஷ்மீரை இந்தியாவில் இருந்து பிரித்தெடுத்து விட முடியாது என்றும் பிரதமர் தனது எச்சரிக்கையில் கூறியுள்ளார். [இ-எ]

## பிரிட்டனின் "வீட்டோ" பயமுறுத்தல்

லண்டன், மே 12 ஜனாதிபதி சதாம் ஹுசேன் பதவி விலகும்வரை ஈராக்மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை விலக்கும் தீர்மானத்தை வீட்டோ செய்யப்போவதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.

இதேவேளை—

குர்டிஷ் இன மக்களுக்கு உதவும் விஷயத்தில் ஈராக் ஒத்துழைக்கும் வரை, அந்த நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளை விலக்குவதை ஆதரிக்க முடியாது என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. [இ-எ]

## குவைத் கட்டுப்பாட்டை நீக்கியது

குவைத், மே 12 ஈராக் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து நாட்டை விட்டு வெளியேறியோர் குவைத் திரும்ப விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை குவைத் அரசு நேற்று முதல் நீக்கி விட்டது.

இதைத் தொடர்ந்து வெளிநாடுகளில் தங்கியுள்ள ஆயிரக்கணக்கான குவைத் பிரஜைகள் தாயகம் திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை துறைமுக திருத்தம்; நிதி உதவி இல்லாததால் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், மே 12

பருத்தித்துறை துறைமுகத்தின் இறங்கு துறையைத் திருத்தும் வேலைகள் விதம் பிதம் அடைந்துள்ளன. திருத்த வேலைகளுக்கு உறுதி அளிக்கப்பட்டது போல அரசாங்க நிதி கிடைக்கவில்லை. அமெரிக்க [யு. எஸ். எயிட்ஸ்] உதவியும் கைக்கு வரவில்லை.

செயலகத்தில் நேற்று நடைபெற்ற திணைக்கள அதிகாரிகள் மாநாட்டில் இத்தகவல்கள் வெளியாகின.

அத்தியாவசியப் பொருள்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதால், கொழும்பிலிருந்து ஒரே தடவையில் இரண்டு கப்பல்களில் பொருள்களைக் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டும் — என்று சகல அதிகாரிகளும் ஒரே குரலில் செஞ்சிலுவை சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டனர்.

அது சாத்தியமில்லை என்றும், பெரும் சிரமங்களின் மத்தியிலேயே பருத்தித்துறைக்கு ஒவ்வொரு கப்பலில் பொருள்களைக் கொண்டு வருவதாகவும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இறங்குதுறை திருத்தப்பட்டு விஸ்தரிக்கப்பட்டால் மட்டுமே ஒரே முறையில் அதிக அளவு பொருள்களைக் கொண்டு வர வசதியாக இருக்கும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். [அ-3]

## தேர்தலை ஒட்டி தளர்த்தப்பட்ட அவசரகாலச் சட்டவிதிகள் நள்ளிரவு முதல் அமுலுக்கு

உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி நாட்டின் தென்பகுதியில் தளர்த்தப்பட்டிருந்த பல அவசரகாலச் சட்ட விதிகள் நேற்று நள்ளிரவு முதல் மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன என் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் நாட்டில் சட்டம் - ஒழுங்கு நிலைநாட்டப்படுவதை உறுதிப்படுத்துமுகமாகவே தளர்த்தப்பட்டிருந்த அவசரகால விதிகள் மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. [உ-எ]

## ஆந்திர எம். எல். ஏயை நக்ஸலைட்டுகள் கடத்தினர்

ஹைதராபாத், மே 12

முன்னாள் மத்திய அமைச்சர் சிவ்சங்கரின் புதல்வரும் ஆந்திர மாநில இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏயுமான திரு. சுதேஷ்குமார் நக்ஸலைட்டுகள் எனக் கருதப்படும் ஆயுதபாணிகளினால் நேற்று கடத்திச் செல்லப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

ஹைதராபாத் நகரில் உள்ள அவரது வீட்டினுள் நேற்றுக் காலை திடீரென புகுந்த ஆயுதபாணிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவரைக் கடத்திச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் வீட்டிலிருந்த ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.

தேர்தல் பிரசாரத்துக்காக இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி ஹைதராபாத் நகருக்கு வந்து சேருவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் இக்கடத்தல் இடம் பெற்றது. [உ-எ]

## பிரிட்டனில் தேர்தல் 'ஜுரம்'

லண்டன், மே 12

பிரிட்டனில் பொதுத் தேர்தல் 'ஜுரம்' அடிக்கத் தொடங்கியிருப்பதாக பி. பி. சி நேற்று அறிவித்தது.

ஆளும் கன்சர் வேட்டிவ் கட்சி எம். பி. ஒருவர் காலமானதைத் தொடர்ந்து, அத்தொகுதியில் எதிர்வரும் வியாழக்கிழமை இடைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது.

அத்தேர்தல் முடிவைப் பொறுத்தே அடுத்த பொதுத் தேர்தலை எப்போது நடத்துவது என்ற முடிவை பிரதமர் ஜோன் மேஜர் எடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால்—

பொதுத்தேர்தல் எதிர்வரும் ஜுன் மாதம் நடத்தப்படும் வாய்ப்பு அதிகரித்திருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சியின் தலைவர் நீல் கின்னொக் தெரிவித்திருக்கிறார். [உ-எ]


## மரண அறிவித்தல்

### வீரவேங்கை பெருமான்

(பரமகுரு — தெய்வசிலன்)

பருத்தித்துறை இன்பருட்டியைச் சேர்ந்த வீரவேங்கை பெருமாள் [பரமகுரு—தெய்வசிலன்] கடந்த வியாழனன்று வீரமரணம் அடைந்துள்ளார்.

அன்னார் பரமகுரு மகிலிகாதேவி ஆகியோரின் அன்புப் புத்திரனும், கௌசல்யா, ரேணுகா, சத்தியசிவன் ஆகியோரின் சகோதரனும், மா. அமிர்தலிங்கத்தின் மைத்துனரும், வ. தம்பிப்பிள்ளை, காலஞ்சென்ற காவிட்பிள்ளை, இராசையா, காலஞ்சென்ற செல்லப்பிள்ளை ஆகியோரின் அன்புப் பேரனும், த. மாணிக்கவாசகர், த. வேலுச்சாமி, [நீர்ப்பாசன இலாகா மேற்பார்வையாளர்] த. பஞ்சாட்சரம், க. சிவராசா [கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்] க. குருசாமி ஆகியோரின் அன்பு மருமகனும் வே. தியாகராசா [லிகிதர் மந்திகை ஆஸ்பத்திரி], அம்மன்கிளி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இன்பருட்டி,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்,
நண்பர்கள்.

[16713]


# தேர்தல் முடிவுகள்

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

**பண்டாரவளை நகரசபை**

★ ஐ. தே. க. — 1,237 வாக்கு — 6 உறுப்பினர்

★ சுயே. 2 — 881 வாக்கு 3 உறுப்பினர்

★ சுயே. 1 — 187 வாக்கு உறுப்பினர் இல்லை.

**பத்தேகம நகரசபை**

★ ஐ.தே.க — 1924 வாக்கு — 6 உறுப்பினர்

★ ஸ்ரீ.ல.சு.க — 1461 வாக்கு — 5 உறுப்பினர்

★ சுயே. குழு — 126 வாக்கு — உறுப்பினர் இல்லை

★ ஸ்ரீல. மக்கள் கட்சி — 20 வாக்கு — உறுப்பினர் இல்லை

**ஹிங்குராகொடை பிரதேச சபை**

★ ஐ. தே. க. — 11,342 வாக்கு — 10 உறுப்பினர்

★ ஸ்ரீ ல. சு. க — 8,844 வாக்கு — 7 உறுப்பினர்

★ ஸ்ரீ. ல. ம. க 1,209 — ஓர் உறுப்பினர்

**தலவாக்கலை - லிந்துல நகரசபை**

★ ஐ.தே.க. — 1310 வாக்கு 6 உறுப்பினர்

★ சுயேச்சைக் குழு 1 - 915 வாக்கு 2 உறுப்பினர்

★ சுயேச்சைக் குழு 2 - 447 வாக்கு 1 உறுப்பினர்

## அண்ணா - எம். ஜி. ஆர். கொடிகளை தடுக்க ரிட்மனு

சென்னை, மே 12

தமிழகத் தேர்தலின் போது போட்டி அ. தி. மு. க. தலைவரான திருநாவுக்கரசு தலைமையில் போட்டியிடும் வேட்பாளர்கள் அண்ணா மற்றும் எம். ஜி. ஆர். ஆகியோரின் படங்கள் பொறிக்கப்பட்ட கொடிகளைப் பயன்படுத்துவதைத் தடை செய்யும்படி கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திரு. திருநாவுக்கரசு தமது தலைமையிலான புதிய கட்சிக்கு அனைத்திந்திய அண்ணா - எம். ஜி. ஆர். முன்னேற்றக் கழகம் என்று பெயர் சூட்டியிருப்பது தெரிந்ததே. [இ-எ]

## பரிசளிப்பு இன்று

யாழ்ப்பாணம், மே 12

மேதினத்தை ஒட்டி தமிழீழ ஆய்வு நிறுவனம் தொழிலாளர்களிடையே நடத்திய போட்டியில் வெற்றியீட்டியோருக்கும் மேதின பேரணி ஊர்தியில் வெற்றி பெற்றோருக்கும் இன்று பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன.

கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாவட்டச் செயலகத்தின் மாவீரர் அரங்கில் இன்று மாலை 6-30 மணிக்கு நடைபெறும் நிகழ்ச்சியில் பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன. [உ]

## குப்பிளானில் மோதல்

யாழ்ப்பாணம், மே 12

நேற்று நண்பகல் 11.30 மணியளவில் குப்பிளான் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் முன்னேற முயன்ற போது விடுதலைப் புலிகள் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தனர். அதனை அடுத்து படையினர் பின்வாங்கி தமது காவல் அரண்களுக்குத் திரும்பினர்.

இதேசமயம் —

நேற்றுக் காலை 6.30 மணியளவில் பலாலி முகாமிலிருந்து வலைய், தொண்டைமானாறு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. [உ-15]

## பிரியாவிடை

தென்மராட்சி, மே 12

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையாற்றி இளைப்பாறிய 12 கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கும், அலுவலக ஊழியர்களுக்கும் பொதுமக்களும், பணிமனை ஊழியர்களும் இணைந்து பிரியாவிடை நடத்தினர்.

உதவி அரசாங்க அதிபர் பூ. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பல பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர். [இ-117]

## பங்களாதேஷில் பூமியதிர்ச்சி

டாக்கா, மே 12

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்றுக்காலை லேசான பூமியதிர்ச்சி ஏற்பட்டது. மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி வீதிகளில் நின்றார்கள். உயிர், உடைமைச் சேதம் பற்றி தகவல் ஏதும் வெளியாகவில்லை.

## பிரெஞ்சு குழு மீது தாக்குதல்: அல்விஸ் தனிநபர் கமிஷன் விசாரணை ஆரம்பமானது

வவுனியா தாண்டிக்குளத்தில் வைத்து பிரெஞ்சு வைத்தியக்குழு மீது மேற்கொள்ளப்பட்டவானத் தாக்குதல் சம்பவம் குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட அல்விஸ் விசாரணைக்குழு தனது விசாரணைகளை நேற்று முன்தினமே ஆரம்பித்தது.

விசாரணைக் குழுவின் முன்னால் இதுவரை ஐ. நா. அகதிகள் தாபரம், ஐக்கிய இராஜ்ஜிய சிறுவர் பாதுகாப்பு நிதியம், பிரெஞ்சு வைத்திய குழு ஆகியவற்றின் அதிகாரிகள் உட்படப் பலர் சாட்சியமளித்துள்ளனர்.

இன்று வரை இந்த விசாரணைகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஓரிரு தினங்களில் வெளியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

## இரண்டாம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விக்கப்படுகிறது.

பரீட்சை நிலையங்களாக இயங்கும் பாடசாலைகள் மாத்திரம் பரீட்சைக் காலத்தில் மூடப்பட்டிருக்கும் என்றும், ஏனைய பாடசாலைகள் வழமைபோன்று நடைபெறும் என்றும் அறிவிக்கப்படுகிறது. [ஒ]

## 4 இளைஞர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இளைஞரும், காக்காச்சி வெட்டை வாசிகளான சமரவிக்ரம அரியரத்தினம் [வயது 27], தம்பிப்பிள்ளை பேரின்பம் [வயது 27], கணபதிப்பிள்ளை சிவலிங்கம் [வயது 25], ஆகியோருமே முகாமுக்குக் கூட்டிச்செல்லப்பட்டனர். [உ]

## உணவுப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் அனுப்பப்படும் பொருள்களின் அறிவிக்கப்படும் அளவுக்கும் இங்கு வந்து சேரும் பொருள்களின் அளவுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் குறித்தும்—

இங்கு வரும் பொருள்களின் பற்றாக்குறை குறித்தும்—

உணவு, வைத்தியம், தொழில் வாய்ப்பு, கல்வி, உற்பத்தி ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும் — உண்மையான நிலைகள் குறித்தும் — தூதுக் குழுவினர் நேரில் விளக்குவர்.

உணவு, மருந்து, எரிபொருள் உட்பட அத்தியாவசிய சேவைகள் இப்போது ஸ்தம்பித நிலை அடைந்திருப்பது குறித்து நேரடியாக கூட்டத்தில் முக்கியமாகப் பேசப்படவுள்ளது. [உ-3]

## தென்பகுதித் தேர்தலில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இவற்றில் பத்து மாநகர சபைகள், 32 நகரசபைகள், எஞ்சியவை பிரதேசசபைகள்.

இச்சபைகளில் 3 ஆயிரத்து 533 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இத்தேர்தலில் 15 ஆயிரத்து 65 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

பதினொரு அரசியல் கட்சிகளும் 82 சுயேச்சைக் குழுக்களும் களத்தில் குதித்திருந்தன.

நேற்றுக் காலையில் இருந்தே வாக்களிப்பு சுறுசுறுப்பாக இடம்பெற்றதாகவும்—

மொத்தம் 75 வீதமானோர் தமது வாக்குகளைப் பதிவு செய்ததாகவும்—

வெளிமாகாணங்களில் வாக்குப்பதிவு 80 வீதமாக இருந்ததாகவும் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்தார்.

நேற்றுப் பகல் 7 ஆயிரத்து 409 வாக்களிப்பு நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட வாக்குகள் நேற்று மாலைக்குப் பின்னர் சுமார் ஆயிரத்து நூறு நிலையங்களில் வைத்து எண்ணப்பட்டுக் கொண்டிருந்தன.

முதலாவது தேர்தல் முடிவு இன்று அதிகாலை 12 15 மணிக்கு உத்தியோகபூர்வமாக வெளியானது.

அதிகாலை வெளியான முடிவுகளின் அநேகமானவற்றில் ஐ.தே.க முன்னணி வகித்தது.

எண்ணப்பட்டுக் கொண்டிருந்த உள்ளூராட்சி சபைகளின் அநேக முடிவுகளிலும் ஐ. தே. கவே முன்னணியில் இருந்தது. [உ-3]

## கடற் கரும்புலி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாக்கி - தம் உயிரையே நெருப்பாக்கி - எதிரியின் கடற் தளத்தை எரித்து சரித்த கடற் புலிகளாகிய கரும்புலி கப்டன் ஜெயந்தன் [சம்புக்குட்டி பதமநாதன் - முறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு], கரும்புலி கப்டன் சிதம்பரம் [பெரியதம்பி சந்திரன் - வல்வெட்டித்துறை] ஆகிய காவிய நாயகர்களின் எழுச்சிக் கூட்டத்தில் அணி, அணியாகத் திரண்டு வந்து, இவர்களின் கனவை நனவாக்க உறுதிபூணுவோம் - என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது. [ஒ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12 - 05 - 1991 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org